[முற்பகல் 10–10]

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.